


03.04.2025

தலைப்பு செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி, தாய்லாந்து பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை, பேங்காக்கில் இன்று மேற்கொள்கிறார்.
- வக்ஃப் சட்டத்திருத்த மசோதா மீதான விவாதம் மாநிலங்களவையில் இன்று தொடங்கியது.
- அமெரிக்கா அறிவித்துள்ள 26 சதவிகித பரஸ்பர வரி விதிப்பு குறித்து ஆராயப்படும் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.
- தமிழ்நாட்டில் 10 கோடி ரூபாய் செலவில் 500 புதிய ஆவின் பாலகங்கள் திறக்கப்படும் என்று மாநில பால்வளத்துறை திரு.ராஜகண்ணப்பன் சட்டப் பேரவையில் அறிவித்தார்.
- வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக 17 மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

6-வது பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று தாய்லாந்து தலைநகர் பேங்க்காக் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அந்நாட்டின் துணை பிரதமர் திரு. ஜங் ரங் ரீங் கிட், பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு பாரம்பரிய சிறப்புமிகு வரவேற்பை வழங்கினார்

கார்பா நடனங்களுடன் இந்திய சமூகத்தினர் பிரதமரை அன்புடன் வரவேற்றனர்.

தமக்கு வழங்கப்பட்ட வரவேற்பு குறித்து பிரதமர் நெகிழ்ச்சியும், மகிழ்ச்சியும் வெளியிட்டார்.

இந்தியாவும் தாய்லாந்தும், பாராம்பரிய கலாச்சார பிணைப்புகளுடன் வேரூன்றி இருப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

2019-ம் ஆண்டிற்கு பின்னர் முதல்முறையாக பிரதமர் தாய்லாந்திற்கு செல்வது குறிப்பிடத்தக்குத

தாய்லாந்து உடனான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் மற்றும் பலநிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் பகிர்ந்துள்ளார்.

2 நாட்கள் பேங்காக்கில் தங்கியிருக்கும் பிரதமர், அந்நாட்டு பிரதமர் பேட்டாங் ட்ரன் ஷினவத்ரா உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்றுமாலை மேற்கொள்கிறார்.
சர்வதேச பிராந்திய பன்முக விஷயங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதிக்கின்றனர்.
பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின்றன.

நாளை தொடங்கவுள்ள பிம்ஸ்டெக் உச்சிமாநாடு வளம், வலுவான முயற்சி, வெளிப்படைத்தன்மை என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறுகிறது.

தாய்லாந்து மன்னரையும், பிரதமர் சந்திப்பார் என தெரிகிறது.இதனைத் தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திரமோடி 3 நாள் பயணமாக நாளைமாலை இலங்கை செல்கிறார்.
வரலாறு, சமயம், கலாச்சாரம், மக்கள் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்நாட்டுடனான இருதரப்பு உறவுகளுக்கு பிரதமரின் பயணம் மேலும் வலுசேர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்
சர்வதேச நாடுகளில் நிலவும் தேக்க நிலையின் மத்தியில் பிம்ஸ்டெக் நாடுகள் ஒருங்கிணைந்து ஆக்கப்பூர்வமான அணுகுமுறையை மேற்கொள்வதன் அவசியத்தை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பேங்க்காக்கில் பிம்ஸ்டெக் அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் உரையாற்றியஅவர், இந்தியாவின் கிழக்குசார் கொள்கை, அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை, கடல்சார் பாதுகாப்பு போன்ற 3 முக்கிய செயலாக்கங்களை எடுத்துரைத்தார்.

மின்தட இணைப்பு, மின்னணு கட்டமைப்பு, வர்த்தகம், கடல் - நிலம் சார்ந்த போக்குவரத்து நீலப்பொருளாதாரம், சுகாதாரம், உணவு, எரிசக்தி பாதுகாப்பு போன்றவை குறித்தும் உறுப்புநாடுகள் செயலாற்ற அவர் அழைப்பு விடுத்தார்.

சுற்றுலாத்துறை வளர்ச்சியை சுட்டிக்காட்டிய டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், பிம்ஸ்டெக் நாடுகள் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

சைபர் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகள், தீவரவாத தடுப்பு நடவடிக்கைகள், மனித கடத்தல், போதைப்பொருள் வர்த்தகம் போன்றவற்றை கையாள தேவையான நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

கிரண் ரிஜுஜு

மாநிலங்களவையில் வக்.ஃப் சட்டத்திருத்த மசோதா 2025ஐ மத்திய சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு இன்று தாக்கல் செய்து இதன் மீதான விவாதத்தை துவக்கிவைத்தார்.

அனைத்து தரப்பினருடனும் விரிவான ஆலோசனைகளுக்கு பின்னரே இம்மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மசோதாவிற்கு எதிர்கட்சிகள் ஆதரவு வழங்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

எதிர்கட்சிகளின் பல்வேறு குற்றச்சாட்டுகளை நிராகரித்த திரு. கிரண் ரிஜுஜு இம்மசோதாவால் இஸ்லாமியர்கள் பயன்பெறுவார்கள் என்றார்.

வக்.ஃ.ப் சொத்துக்கள் மேலாண்மையில் இஸ்லாமியர்கள் அல்லாதோர் தலையிடுவார்கள் என்று கூறப்படுவது தவறானது என்றும் குறிப்பிட்டார்.

வக்.ஃ.ப் வாரிய சொத்துக்களை முறையாக மேலாண்மை செய்வதை நோக்கமாக கொண்டே இம்மசோதா கொண்டுவரப்பட்டு உள்ளதாகவும், இஸ்லாமியர்களின் மத வழிபாடுகளில் எந்த தலையீடும் இருக்காது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த மசோதா மீதான விவாதத்தில் அமைச்சர் தொடர்ந்து உரையாற்றி வருகிறார்.

❖❖❖❖❖❖

சிராக் பாஸ்வான்

வக்.ஃ.ப் சட்டத்திருத்த மசோதா இஸ்லாமியர்களுக்கு எதிரானது என்று எதிர்கட்சி தலைவர்கள் தவறான தகவல்களை பரப்புவதாக மத்திய அமைச்சரும் லோக் ஜன்சக்தி தலைவருமான திரு. சிராக் பாஸ்வான் குற்றம் சாட்டியுள்ளார்

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஏழை இஸ்லாமியர்கள் மற்றும் அப்பிரிவு மகளிருக்கு சாதகமானது இந்த மசோதா என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

வெளிநடப்பு

நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மீது பி.ஜே.பி. உறுப்பினர் திரு. அனுராக் சிங் தாகூர் கூறிய குற்றச்சாட்டை கண்டித்து எதிர்கட்சி உறுப்பினர்கள் மாநிலங்களவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

மாநிலங்களவை இன்று கூடியதும், இந்த பிரச்சனையை எழுப்பிய திரு. கார்கே, தமது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் பி.ஜே.பி. உறுப்பினர் இந்த குற்றச்சாட்டை தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டார்.

மக்களவையில் திரு. தாகூர் நேற்று தெரிவித்த கருத்துக்களுக்கு அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் திரு.கார்கே வலியுறுத்தினார்.

இதுகுறித்து ஆராய நாடாளுமன்ற ஒழுங்குமுறை தலைவரை திரு.தன்கர் அறிவுறுத்தினார்.

பின்னர் திரு. அனுராக் சிங் தாகூரின் கூற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

இதனிடையே ஜபல்பூரில் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் விவகாரம் தொடர்பாக கேரள மாநிலத்தை சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் எதிர்கட்சியினர் மக்களவையிலிருந்து இன்று வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே.சி. வேணுகோபால் இச்சம்பவத்திற்கு பி,ஜே.பி. மீது குற்றம் சாட்டினார்.

❖❖❖❖❖❖

டிரம்ப்

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா உள்ளிட்ட பிற நாடுகள் மீது அறிவித்துள்ள 26 சதவிகித பரஸ்பர வரி விதிப்பு குறித்து இந்தியா ஆராயும் என்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இந்த அறிவிப்பால் ஏற்படும் தாக்கங்கள், அவற்றை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அரசு ஆலோசனை மேற்கொள்ளும் என்றார்.

அமெரிக்க அதிபருக்கு, அமெரிக்கா முதன்மையாக இருப்பது போல, பிரதமர் திரு. நரேந்திரமோடிக்கு இந்தியா முதன்மையாக உள்ளது என்றார்.

முன்னதாக புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச ஓய்வூதிய ஆராய்ச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய திரு. பங்கஜ் சவுத்ரி, பல்வேறு பகுதிகளில் உள்ள நாட்டு மக்களுக்கான ஓய்வூதிய பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு எட்டப்படவேண்டுமென்று வலியுறுத்தினார்.
2 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் உலக சூழலுக்கு ஏற்ப பென்ஷன் முறைகளின் செயலாக்கம் குறித்து விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

சட்டப்பேரவை காரல்மார்க்ஸ்
உலக மாமேதை கார்ல்மார்க்ஸை போற்றும் வகையில் சென்னை மாநகரில் அவருக்கு திருவுருவச்சிலை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று அவைவிதி 110-ன் கீழ் அறிக்கை தாக்கல் செய்து பேசியஅவர், தொழிற்சங்க இயக்கம் கோலோச்சிய சென்னை மாநகரில் அன்னாரது சிலை அமைப்பது பொருத்தமானது என குறிப்பிட்டார்.

அதேபோல் மறைந்த அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் தலைவர் திரு.பி.கே. மூக்கையா தேவரின் 103-வது பிறந்தநாளை ஒட்டி மதுரை உசிலம்பட்டியில் அன்னாருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்றும் அறிவித்தார்.

❖❖❖❖❖❖

ச.பே. : ராஜகண்ணப்பன்
தமிழ்நாட்டில் பால், உபபொருட்கள் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் 10 கோடி ரூபாய் செலவில் 500 புதிய ஆவின் பாலகங்கள் திறக்கப்படும் என்று மாநில பால்வளத்துறை
திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமதுதுறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், பாலின் தரத்தை ஆய்வுசெய்ய 9 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் பகுப்பாய்வு நவீன கருவிகள் வாங்கப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

ச.பே. அனிதா ராதாகிருஷ்ணன்

பசுந்தீவன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் மேய்க்கால் நில மேம்பாட்டுத்திட்டம் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று மாநில கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு.அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், மாவட்டந்தோறும் ஒருங்கிணைந்த கால்நடை பண்ணைத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை தொழில்முனைவோருக்கான ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும்,

தெருக்களில் விடப்படும் கால்நடைகளுக்காக ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட கால்நடைகளுக்கான கொள்கை உருவாக்கப்படும்,

மீனவ மகளிரின் பொருளாதார மேம்பாட்டிற்காக நுண்கடன் வழங்கிட ஏதுவாக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலைகள் திட்டம் செயல்படுத்தப்படும்,

தரங்கம்பாடி தேங்காய் பட்டினம், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்கள் 45 கோடி ரூபாய் செலவில் பசுமை மீன்பிடி துறைமுகங்களாக மேம்படுத்தப்படும் உள்ளிட்ட பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

❖❖❖❖❖❖

மானியக்கோரிக்கை – எம்.ஆர்.கே.

விழுப்புரம், விருதுநகர், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய 7 இடங்களில், 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று மாநில வேளாண் துறை அமைச்சர் திரு.MRKபன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில், வேளாண் மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதிலளித்து பேசியஅவர், தோட்டக்ககலைத்துறை சார்பில், ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், நாற்றாங்கால் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்படும் என்றார்.

தென்னை உற்பத்தி திறனை அதிகரிப்பது குறித்தும், மா மரங்களில் கவாத்து செய்வது குறித்தும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

KKSSR ராமச்சந்திரன்

வானிலை முன்னெச்சரிக்கை மற்றும் புயல் கண்காணிப்பிற்காக ஏற்காடு, ராமநாதபுரம் மாவட்டங்களில் 56 கோடி ரூபாய் மதிப்பில் அதிநவீன ரேடார் கருவிகள் நிறுவப்படும் என்று மாநில பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் இன்று பேசிய அமைச்சர் அவசரகாலத்தில், கட்டுப்பாட்டு மையங்களில் தெரிவிக்கும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வுகாணப்படுவது உறுதிசெய்யப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

மின்சாரம்

மின்சாரம் தொடர்பான புகார்களுக்கு தீர்வுகாணும் வகையில் நாளைமறுநாள் ஒருநாள் சிறப்பு குறைதீநாள் முகாம் நடைபெறும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

ஈரோடு வாய்ஸ்

ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலம் வனப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் வனவிலங்குகளின் தாகத்தை தணிக்க அங்குள்ள குட்டைகளில் தண்ணீர் நிரப்பும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்திய ராணுவத்தில் அக்னிவீர் பொதுபணியாளர் தொழில்நுட்ப பணிகளுக்கு வரும் 10 தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தாட்கோ நிறுவனம் மூலம் ஆதிதிராவிட மாணாக்கரை தொழில் முனைவோராக மாற்றும் வகையில் நடைபெறும் புத்தாக்க பயிற்சிக்கு பொறியியல் பட்டப்படிப்பு முடித்த மாணாக்கர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பு மண் பரிசோதனை முகாம் இம்மாதம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் நடைபெறவுள்ளதாகவும், மண் மற்றும் நீர் மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டு மண்வள அட்டைகள் அன்றைய தினமே விவசாயிகளுக்கு வழங்கப்படும் என்றும் ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நீர்வள ஆதாரங்களை சீரமைத்து நிலத்தடி நீரை மேம்படுத்தும் வகையில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் தங்களது நில உடைமை விவரங்களை பதிவு செய்யும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖

வானிலை
வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர். சிவகங்கை, தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இன்றும் நாளையும் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

டென்னிஸ்
ஸ்பெயினில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சாகித் மைனேனி இணை - இஸ்ரேலின் டேனியல், இங்கிலாந்தின் ஜோஷ்வா பாரீஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖